<u>**DEPOSITION OF WITNESS**</u>

<u>**(Chapter XXIII Code of Criminal Procedure)**</u>

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 294/2022**

Prosecution witness: **1**

| | | | |
|---|---|---|---|
| Name: | கொம்பையா | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

Accused absent. Petition 317 filed and allowed

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of **22.06.2023**

<u>**முதல் விசாரணை**</u>:

நான் தற்போது தேவர்குளம் காவல் நிலையத்தில் முதல்நிலைக்காவலராக பணியில் உள்ளேன். இதற்கு முன்னர் மானூர் காவல் நிலையத்தில் காவலராக பணிபுரிந்தபோது கடந்த 12.11.2020 ம் தேதி காலை 10.00 மணிக்கு ஆய்வாளர்-ராமர், முதல்நிலை காவலர்-சிங்கதுரை மற்றும் நானும் ஆய்வாளர் தலைமையில் திருநெல்வேலி சங்கரன்கோவில்சாலையில் இராமையன்பட்டி விளக்கில் மதுவிலக்கு சம்பந்தமாக வாகன தணிக்கை செய்துகொண்டிருந்தோம். சுமார் 10 மமணிக்கு TN 72 BK 6431 என்ற டிவிஎஸ் ஜூபிடர் என்ற இருசக்கரவாகனத்தில் வடக்கில் இருநது கிழக்கு நோக்கி திரும்ப முயன்றவர் போலீஸ்பார்ட்டியாகிய எங்களை கண்டதும் வாகனத்தை திருப்பி கொண்டு செல்ல முயற்சித்தார் அவரை நாங்கள் சந்தேகத்தின் பேரில் மடக்கி பிடித்து விசாரித்தபோது அவர் பெயர் விலாசம் கூறினார். அவர் இருசக்கரவாகனத்தின் முன்னால் பிளாஸ்டிக் சாக்குப்பை இருந்தது.

அதுபற்றி அவரிடம் விசாரத்தபோது அதில் சுமார் 1 1/2 கிலோ கஞ்சா இருப்பதாக கூறினார். ஆய்வாளர் உன்னை சோதனை செய்ய வேண்டும் என்றும் என்டிபிஎஸ் சட்ட படி நீங்கள் விரும்பினால் உம்மை அரசிதழ் பதிவிதழ் பெற்ற அலுவலரிடமோ, நீதித்துறை நடுவரிடமோ ஆஜர்படுத்தி உன்னை சோதனை செய்யலாம் என்ற விபரத்தை அவருக்கு எடுத்து கூறப்பட்டது. அவர் என்னை எங்கும் அழைத்து செல்லவேண்டாம். ஆய்வாளராகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார். அவர் கூறிய விபரங்களை 10.15 மணிக்கு சோதனை சம்மத கடிதமாக எழுதி தனி நபர்சாட்சிகளை அழைததபோது எவரும் சாட்சியாக இருக்க முன் வராததால் என்னையும் முதல் நிலை காவலரையும் சாட்சியாக வைத்து எதிரியிடம் கையொப்பம் பெற்றார். அதில் நாங்களும் கையொப்பம் செய்தோம் எதிரி தாமாக முன் வந்து அவர் வைத்திருந்த பிளாஸ்டிக் சாக்குப்பையை எடுத்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தார். அந்த பையை பிரித்து பார்த்தபோது அதில் பிளாஸ்டிக் கவரில் அரசால் தடைசெய்யப்பட்ட கஞ்சா உலர்ந்த நிலையில் இருந்தது. அதை எங்கள் கைவசம் இருந்த தராசில் கொட்டி எடை பார்த்தபோது அது சுமார் 1,500 கிராம் இருந்தது. அதில் இருநது 100 கிராம் கஞ்சாவை எடுத்து ஒரு பிளாஸ்டிக் கவரில் வைத்து காக்கி நிற தாளில் வைத்து நூலால் கட்டி SHO சீல் வைக்கப்பட்டது. மீதம் உள்ள கஞ்சாவை பிளாஸ்டிக் கவரில் வைத்து காக்கி நிற தாளில் வைத்து நூலால் கட்டி SHO சீல் வைக்கப்பட்டது. அவர் இருச்சர வாகனத்தை கைப்பற்றி அதில் எதிரியின் கையொப்பம் பெற்று வேறு சாட்சிகள் இல்லாததால் நாங்களே சாட்சிகளாக இருந்து கையொப்பம் செய்தோம். பின்னர் கைப்பற்றிய சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு அத்தாட்சி தயாரிக்கப்பட்டது. பின்னர் எதிரியையும் கைப்பறறிய சொத்துக்களையும் 11 15 மணிக்கு எதிரியை கைது செய்வதாக அறிவித்து 11.45 மணிக்கு நிலையம் கொண்டுவந்தோம். ஆய்வாளருக்கு

உதவியாக நாங்கள் இருந்தோம். என்னை ஆய்வாளர் விசாரித்தார். சோதனை சம்மத கடிதம் அ.சா.ஆ. 1 ஆகும். அத்தாட்சி அசா.ஆ. 2 ஆகும்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

வாகன தணிக்கைக்காக காலை 9.00 மணிக்கு நிலையத்தில் இருநது புறப்பட்டோம். நாங்கள் மொத்தம் மூவர் தணிக்கைக்காக சென்றோம். இராமையன்பட்டி விளக்கில் சுமார் 9.50 மணிக்கு நின்று தணிக்கை செய்துகொண்டிருந்தோம். இராமையன் பட்டி விளக்கிற்கு தெற்கே இராஜகோபாலபுரம் என்ற ஊர் உள்ளது. நாங்கள் தணிக்கை செய்து கொண்டிருந்த இடம் 3 சாலை சந்திக்கும் ரோடு ஆகும். சாலையின் மேற்கு புறம் பிரிவு சாலை எதுவும் இல்லை. நாங்கள் நின்று இருந்த இடத்திற்கு மேற்கு புறமாக ஓட்டல், டீக்கடை, பலசரக்கு கடைகள் உள்ளது. மேற்கு நோக்கி செல்லும் ரோடுகள் இல்லை. எதிரியின் வாகனத்தை சோதனை செய்வதற்கு முன்பாக நாங்கள் 4 வாகனத்தை நிறுத்தி தணிக்கை செய்தோம். முதலில் அவரை நிறுத்தியதும் அவர் பெயர் விலாசம் பற்றி விசாரித்து கொணடு பின்னர் மற்ற நடவடிக்கைகளை துவக்கினோம். அவர் பெயர் விலாசம் கூற சுமார் 15 நிமிடங்கள் ஆனது. அதன் பின்னர் தான் சோதனை சம்மத கடிதம் தயாரித்தோம். ஆய்வாளர் எதிரியின் உடலை தொட்டு திரேக பரிசோதனை செய்தார். சோதனை சம்மத கடிதம் பெற்ற பின்னர் தான் கஞ்சா கைப்பற்றப்பட்டது. முதல் நிலை காவலர்-சிங்கதுரை என்பவர் ஆவணங்களை எழுதினார். சோதனை சம்மத கடிதத்தில் என் பெயர், பதவி நிலை பற்றி குறிப்பிடவில்லை. சோதனை சம்மத கடிதத்தையும், கைது நமூனாவையும் தனித்தனி ஆவணமாக எழுதினோம். ஆய்வாளரை எதிரி சோதனை செய்தார். சோதனை சம்மத கடிதத்தில் உள்ள வாசகங்களை படித்து பார்த்துதான் சாட்சியாக கையொப்பம் செய்தேன். சோதனை சம்மத கடிதத்தில் " நீவிர் தடைசெய்யப்பட்ட கஞ்சாவை விற்பனை செய்வதற்காக

வைத்திருந்த குற்றத்திற்காக " என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால சரிதான். ஆய்வாளரை சோதனை செய்யவேண்டுமா என்று எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்டது. இரண்டு முறை கேள்வி கேட்டதற்கும் ஒரே முறை தான் சாட்சியாக கையொப்பம் இட்டேன். சோதனை சம்மத கடிதத்தில்" எனக்கு தெரிவிக்கப்பட்ட உரிமையை நான் தெரிந்துகொண்டேன் " என்று எதிரி கூறியதாக அதில் கூறப்பட்டுள்ளதா என்றால் கூறவில்லை. சம்பவ இடத்தில் மொத்தம் சுமார் 1 1/4 மணி நேரம் அங்கு இருந்தோம். பிளாஸ்டிக் சாக்கு என்பது வேறு என்றும் யூரியா சாக்கு என்பது வேறு என்றும் சொன்னால் சரியல்ல. இருசக்கரவாகனத்தின் மீதாக உள்ள பிளாஸ்டிக் சாக்கின் மீது எதுவும எழுதப்படவில்லை. இருசக்கரவ வாகனத்தின் முன்னால் பிளாஸ்டிக் சாக்கை அத்தாட்சியில் கைப்பற்றவில்லை. பொருட்களை சிங்கதுரை எடைபோட்டார். அத்தாட்சி ஆவணத்தில் என் பெயரையும், சிங்கதுரை பெயரும் சாட்சியாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தாட்சியில் கைப்பற்றியதாக கூறப்படும் வாகனத்தின் இஞ்சின் நம்பர் இல்லை. அத்தாட்சி ஆவணத்தில் SHO சீல் முத்திரையின் மாதிரி வைக்கப்படவில்லை. காவல் நிலையம் சென்ற பின்னர் வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதன் பின்னர்தான் குற்ற எண் வழங்கப்பட்டது. பொதுவாக வாகன தணிக்கைக்கு செல்லும்போது படிக்கல், அரக்குசீல் , தராசு போன்ற பொருட்களை எடுத்து செல்ல அவசியம் இல்லை என்றால் சரியல்ல. வாகன தணிக்கைக்கு செல்லும்போது அவை தேவையிலலை என்றால் சரிதான். நாங்கள் தகவல் கிடைத்து சம்பவ இடம் செல்லவில்லை. மதுவிலக்கு ரோந்துக்கு செல்லும்போது தராசு எடுத்து செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. மீதம் உள்ள கஞ்சாவை பிளாஸ்டிக் கவரில் வைத்து கைப்பற்றினோம். சம்பவ இடத்தில் கடைகள், வீடுகள் உள்ளது என்றால் சரிதான். அங்கிருந்தவர்கள் எங்களை வேடிக்கை பார்க்கவில்லை. தனிநபர் சாட்சிளை அழைத்தோம். எவரும்

தனி நபர் சாட்சியாக இருக்க முன் வரவில்லை. அவ்வாறு அழைத்தும் வர மறுத்த தனி நபர்க சாட்சிகள் எத்தனை பேர் என்றோ, அவர் பெயர் விலாசம் குறித்து ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் முதல் விசாரணையில் கூறியதுபோல் ஆய்வாளருடன் வாகன தணிக்கைக்கு செல்லவில்லை என்றும் சம்பவ இடத்திற்கு எதிரி வரவே இல்லை என்றும் அவருக்கு உரிமை அறிவிப்பு எதுவும் வழங்கவில்லை என்றும் அவரிடம் இருந்து போதைப்பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. மனுவிசாரணைக்கு என்று மனுதாரரை காவல் நிலையம் வரவழைத்து அவர் மீது இந்த பொய்யான வழக்கு பின்னிட்டு நிலையத்தில் வைத்து பதிவு செய்யப்பட்டது என்றும் பின்னிட்டு இந்த வழக்கிற்காக ஆவணங்கள் உற்பத்தி செய்யப்பட்டது என்றும் எதிரியை அச்சுறுத்தி கையொப்பம் பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல.

=